## தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை – அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை!

## தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து!

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை" தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் கழகங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை வருகிற 15.03.2026 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஆவடி தெற்கு பகுதி, ஆவடி கிழக்கு பகுதி, ஆவடி மேற்கு பகுதி, ஆவடி வடக்கு பகுதி, திருநின்றவூர் நகரம், திருவேற்காடு நகரம், பூவிருந்தவல்லி நகரம், பூவிருந்தவல்லி கிழக்கு, பூவிருந்தவல்லி மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் வடக்கு, எல்லாபுரம் மத்தியம், திருமழிசை பேரூர் உள்ளிட்ட கழக நிர்வாகங்களில் வருகிற 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை. காலை 10.00 மணியளவில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| கழக நிர்வாகம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| பூவிருந்தவல்லி நகரம் | GR திருமலை | கழக அமைப்பு செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணசாமி | மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் K.சுரேஷ்குமார்<br>மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் நாகூர்கனி<br>மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் எ.விமல் ஆனந்த்<br>மாவட்ட சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் க.ஷாஜகான்<br>பூவிருந்தவல்லி நகர மன்ற துணை தலைவர் ஸ்ரீதர் | பூவிருந்தவல்லி நகரம் |
| ஆவடி மாநகரம் | ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் | அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் | பகுதி செயலாளர்கள் ராஜேந்திரன், பேபி சேகர், பொன் விஜயன், நாராயண பிரசாத் | ஆவடி மாநகரம் |
| திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம் ஆனந்த் | தலைமை செயற்குழு உறுப்பினர் திரு.K.J.ரமேஷ் | பொதுக்குழு உறுப்பினர் J மகாதேவன்<br>மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.ஆதிகேசவன்<br>மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ப.குமரேசன் | செவ்வாப் பேட்டை |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | D.தேசிங்கு | மாவட்ட அவைத் தலைவர் திரு.ம.ராஜி | பொதுக்குழு உறுப்பினர் எம்.முத்தமிழ் செல்வன்<br>மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் துர்கா பிரசாத்<br>மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கு.தமிழ்ச்செல்வி | நெமிலிச்சேரி |
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | R.ஜெயசீலன் | மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன் | மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் த.குமரேசன்<br>மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் சா.செளந்தரராஜன் | காக்களூர் |
| திருமழிசை பேரூர் | முனுசாமி | மாநில சிறுபான்மை அணி இணை செயலாளர் திரு.சி.ஜெரால்டு | பொதுக்குழு உறுப்பினர் கு.விமல் வர்ஷன்<br>மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் மோகன்<br>மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் நிஜலிங்கம்<br>பேரூர் மன்ற துணை தலைவர் அனிதா சங்கர் | திருமழிசை |
| திருநின்றவூர் நகரம் | தி.வை.இரவி | மாவட்ட துணை செயலாளர் திரு.V.J.சீனிவாசன் | பொதுக்குழு உறுப்பினர் V குமார்<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தியாகராஜன்<br>மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரவீன்குமார்<br>திருநின்றவூர் நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி<br>திருநின்றவூர் நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ் | திருநின்றவூர் காந்தி சிலை |
| பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் | மாவட்ட துணை செயலாளர் திரு.S ஜெயபாலன் | பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர்<br>மாவட்ட விவசாய தொ. அணி அமைப்பாளர் எம்.இளையான்<br>மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் என்.சண்முகம் | காட்டுப்பாக்கம் |
| எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | மாவட்ட துணைச் செயலாளர் திருமதி. எஸ்.காயத்திரி ஸ்ரீதரன் | மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஐ.பசீர் அகமது அலிகான்<br>மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.பார்த்திபன் | தாமரைப் பாக்கம் |
| திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | திரு முரளி கிருஷ்ணன் | மாவட்ட பொருளாளர் திரு.பா.நரேஷ் குமார் | மாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் AG. ரவி<br>மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா சீனிவாசன்<br>மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் ஜி.ராஜேஷ்குமார் | வெள்ளியூர் |
| திருவேற்காடு நகரம் | NEK மூர்த்தி | பொதுக்குழு உறுப்பினர் திரு.த.எத்திராஜ் | பொதுக்குழு உறுப்பினர் திருமதி.S காஞ்சனா சுதாகர்<br>மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் A.J. பௌல்<br>மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத்<br>மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஐ.ஜாக்கப் | திருவேற்காடு |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும். நமது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



கும்மிடிப்பூண்டி கிராமத்தில் தீ விபத்தால் வீடு இழந்த நாராயணன் குடும்பத்தினரை தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் ஆறுதல் கூறி நிதி உதவி மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் மு.மணிபாலன், கே.ஆறுமுகம், உதயன், கே.வி. நாகராஜ், எம்.அமுல்ராஜ், ராஜ்குமார் பாண்டியன், கிஷோர், சுனில், அருண் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. மேம்பாட்டு நிதியில்

## திரு.வி.க.நகரில் ரூ.32.28 இலட்சத்தில் பல்நோக்கு மையக் கட்டடம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச்.14-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.சிவகுமார்(எ)தாயகம்கவி அவர்களின் 2024-25ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் திரு.வி.க.நகர் மண்டலம் 6, வார்டு எண் 71ல் ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் திறப்பு விழா திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப.சிவகுமார்(எ)தாயகம்கவி முன்னிலையில், மேயர் ஆர்.பிரியா தலைமையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை மேயர் மு.மகேஷ் குமார், திரு.வி.க.நகர் மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், 71வது வார்டு மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராசன், திரு.வி.க.நகர் மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌசிக் மற்றும் திரு.வி.க.நகர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ் வேந்தன், தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக் கண்ணு, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி சசிகுமார் 71வது வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

#### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் சி. நடராஜன் 22/176, சிவசுப்பிரமணியம், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் க. ராஜேஷ் மணி 4/120ஏ, தளி ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை – 642112, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் டி.எஸ். பொன்ராஜ் 1/247, சித்தாண்டிஸ்வர் கார்டன், ஏரிப்பாளையம், உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) இரா. மகேஸ்வரன் 506ஏ, குமரன் வீதி, காரத்தொழுவு அஞ்சல், மடத்துக்குளம் – 642238, திருப்பூர் மாவட்டம். 2) எம். இந்திரகலை நாச்சியார் 1, தாஜ் ஹோட்டல், கச்சேரி தெரு, உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம். 3) வெ. சக்திவேல் 1/295, குமணன் வீதி, குமரலிங்கம், மடத்துக்குளம் – 642204, திருப்பூர் மாவட்டம். 4) எஸ்.ஆர். மோகன் சங்கர் 16/59, செங்கங்டிப்புதூர், வேடபட்டி, மடத்துக்குளம் – 642203, திருப்பூர் மாவட்டம். 5) நா. நாகமாணிக்கம் 230, கழுகரை, மடத்துக்குளம் – 642113, திருப்பூர் மாவட்டம்.

#### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் கோ. சாமுவேல் பாஸ்கர்ராஜ் 8/8, பாகைநேரி, பாப்பான்குளம் அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா – 627110, திருநெல்வேலி.

துணைத் தலைவர் க. தவசிராஜன் அருணா கட்டிடம், இராதாபுரம் ரோடு, வள்ளியூர் – 627117, திருநெல்வேலி.

அமைப்பாளர் கே. பாலச்சந்தர் 62, மெயின் ரோடு, மூன்றடைப்பு, நாங்குநேரி தாலுக்கா – 627152, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் 1) எல். சுப்பிரமணியன் 75/28, தேவர் கீழத் தெரு, வள்ளியூர் – 627117, திருநெல்வேலி. 2) ஜெ. கிறிஸ்டோபர் 16/44, சகாயம் தெரு, புதியம்புத்தூர், மகேந்திரபுரி அஞ்சல், திருநெல்வேலி. 3) இ. சந்திரசேகர் 15/73, வடக்கு ரத வீதி, திருக்குறுங்குடி – 627115, திருநெல்வேலி. 4) எம். ராஜா நிர்மல் கிளாட்சன் 99, புவனேஸ்வரி காம்ப்ளெக்ஸ் இராதாபுரம் மெயின் ரோடு, வள்ளியூர் – 627117, திருநெல்வேலி. 5) அ. இக்னேஷியஸ் பிராங்ளின் 8/5, தெற்கு ரத வீதி, இராதாபுரம், திருநெல்வேலி.

#### தஞ்சை வடக்கு மாவட்டம்

தஞ்சை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பி. விக்னேஷ் அவருக்குப் பதிலாக **எம்.பி. மனோகரன்** , (24, எருத்துக்கார தெரு, மருத்துவக்குடி, ஆடுதுறை – 612101, திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-03-2026

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி

### கடம்பத்தூர் ஒன்றியம் மேல்நல்லாத்தூரில்

## தீ பற்றி எரிந்து வீடு சேதம்! குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### வி.ஜி ராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர் மார்ச் 14

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் மேல் நல்லாத்தூர் ஊராட்சி அம்பேத்கார் தெருவை சேர்ந்தவர் தேவராஜ் என்பவரின் மகன் சிவசங்கரன் வயது 40 இவர் மனைவி கல்பனா தேவி மற்றும் தாயார் முத்துலட்சுமி வயது 81 ஆகியோருடன் வசித்து வந்தார். மின் கசிவு காரணமாக வீடு தீப்பிடித்து எரிந்தது. வீட்டிலிருந்த சோபா, கட்டில்,பிரிட்ஜ் வாஷிங் மெஷின்,பீரோ மற்றும் அதிலிருந்த துணிமணிகள் மற்றும்வீடு உபயோக பொருட்கள் உட்பட ரூ.10 லட்சத்துக்கும் மேற்பட்ட மதிப்பில் பொருட்கள் எரிந்து நாசமானது.தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருவள்ளூர் தீயணைப்பு துறையினர் இரண்டு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இதையடுத்து திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் பாதிக்கப்பட்டவர் நேரில் சந்தித்து ரொக்கமாக 10 ஆயிரம் ரூபாய் மற்றும் மளிகை பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார்.மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கல்பனா தேவியின் கணவருக்கு தொடர்ந்து மேல் சிகிச்சை அளிக்க உதவி செய்வதாகவும் கூறினார்.

மேலும் அரிசி, மளிகை பொருட்கள் நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் கே. ஹரி கிருஷ்ணன், பிரகாஷ் ஞான ஒலி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர்.பிரபாகரன், நிர்வாகிகள் தாடி நந்தகோபால், புட்லூர் ராஜேந்திரகுமார், சி.ஆர்.குமரன், கொப்பூர் திலீப் குமார், ராம்கி பெரியசாமி, ஜெயபிரகாஷ், அண்ணாமலை, பெரியசாமி, ராமதாஸ், வெங்கத்தூர் வருவாய் ஆய்வாளர் ராஜலட்சுமி,கிராம நிர்வாக அலுவலர் (வெங்கத்தூர்) கோபிநாத்,மேல்நல்லாத்தூர் நிர்வாகிகள் ரமணன், குருசாமி, வெங்கடேசன், சுதாகர், ராஜசேகர், பரணிதரன், வசந்தி, லோக நாயகி, அன்னபூரணி, கிளை பிரதிநிதி விஜயா, துணை செயலாளர் சுலோக்சனா,சரஸ்வதி உட்பட பலர் உடனிருந்தனர் .



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் கிளைக் கழக செயலாளருமான கே. ஏ. டி. அன்பு, ஏற்பாட்டில் உலக மகளிர் தின விழாவில் மகளிர் அணியைச் சார்ந்த தனக்கோட்டி அன்பு தலைமையில் கேளம்பாக்கம் கோவளம் சாலையில் அமைந்துள்ள எஸ்.எம்.எஸ். திருமண மண்டபத்தில் 2000க்கும் மேற்பட்ட மகளிருக்கு புடவைகள் வழங்கியும் குலுக்கல் முறையில் சுமார் ஐந்து மகளிர்க்கு சமையல் எரிவாய்வு அடுப்பு , மற்றும் வெட் கிரைண்டர் வழங்கியும், மகளிர் தின விழாவை சிறப்பித்தனர். இதில் கழக இளைஞரணி சர்மா ,விஜி ,ஐயப்பன், ஷாம், நடராஜ், அருள், ராஜா, மோகன், எபி, உதயா, ராஜேஷ், வேணு, நாதன், சுமன், உமர், மற்றும் மகளிர் அணி மகாலட்சுமி, தேவகி, லதா, கவிதா, மோகனா, விமலா, நடராஜ். மகா. சத்தியா. கயல். ராஜா, கீர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் வடக்கு பகுதி 159 வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் முன்னிட்டு வட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கழகத் தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் பகுதிச் செயலாளர்கள், ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆலந்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.